**சுருக்கம்**

நில அபகரிப்பு தொடர்பான புகார் மனுக்கள் – விரைவான தீர்வு வேண்டி மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு குழு அமைத்தல் - அறிவுறுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**உள் (காவல்-11) துறை**

அரசாணை (நிலை) எண்.119

நாள்.16.03.2023
சுபகிருது ஆண்டு
பங்குனி மாதம் 02 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு – 2054

படிக்க.

1. அரசாணை (நிலை)எண்.423, உள் (காவல்-11) துறை, நாள் 28.07.2011.
2. அரசாணை (நிலை) எண்.124, உள் (காவல்-11) துறை, நாள் 06.02.2012.
3. அரசாணை (நிலை) எண்.451, உள் (நீதிமன்றங்கள் 2) துறை, நாள் 11.08.2011.
4. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக கடிதம் எண். Camp P.R.23/2022, நாள் 30.07.2022.
5. உதவி காவல் துறைத் தலைவர் (உயர்நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு பிரிவு, மேற்பார்வை, நில அபகரிப்பு தடுப்பு பிரிவு, தலைமையகம், சென்னை-04, ந.எண்.55/camp/ ALGSC/2022, நாள் 07.10.2022.

------

**ஆணை**

மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் மாவட்ட அளவில் 31 நில அபகரிப்பு தடுப்பு பிரிவும், காவல் ஆணையரகங்களில் 7 நில அபகரிப்பு தடுப்பு பிரிவும், மாநில தலைமையகத்தில் ஒரு பிரிவும் உருவாக்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. நில அபகரிப்பு தடுப்பு பிரிவு உருவாக்கப்பட்ட வருடமான 2011 முதல் 31.12.2021 வரை 1,82,203 மனுக்கள் பெறப்பட்டு அதில் 4,528 வழக்குகளாக பதிவு செய்யப்பட்டு அவ்வழக்குகளில் 4,225 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்நில அபகரிப்பு பிரிவுகளின் மூலம் ரூ.3,960 கோடி மதிப்பிலான 6.991 ஏக்கர்

நிலம் மற்றும் 44.36.110 சதுர அடி வீட்டு மனைகள் மீட்கப்பட்டு, 3,504 உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட நில அபகரிப்பு குறித்த புகார் மனுக்கள் கணிசமான அளவில் நிலுவையில் உள்ளன. மேற்படி மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு வருவாய் துறை, பதிவுத் துறை, நில அளவைத்துறை ஆகிய துறைகளின் ஆவணங்கள் தேவைப்படுகின்றன. மேலும், காவல் துறையில் அமைக்கப்பட்டுள்ள இந்நில அபகரிப்பு பிரிவானது பதிவுத் துறை, வருவாய் துறை, நில அளவைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் தனித் தனியே கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தேவையான ஆவணங்களை பெற்று மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதில் காலதாமதமாகிறது.

3. மேற்கண்ட நிலையில், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக கடிதத்தில், நில அபகரிப்பு தொடர்பான நிலுவை மனுக்களுக்கு தீர்வு காணும் விதமாக, காவல் துறை, பதிவுத்துறை, வருவாய் துறை, நில அளவைத் துறை சார்ந்த அலுவலர்களை கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு ஒன்றினை உருவாக்கியுள்ளதாகவும், அதன் மூலம் மேற்படி நிலுவை மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இத்தகைய ஒருங்கிணைப்பு குழுவினை மாநிலம் முழுவதும் அமைத்தால், நில அபகரிப்பு தொடர்பான புகார் மனுக்களின் மீது விரைந்து தீர்வு காண ஏதுவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

4. இப்பொருள் தொடர்பாக உதவி காவல் துறைத் தலைவர், நில அபகரிப்பு தடுப்பு பிரிவு, தலைமையகம், சென்னை, மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில், மேற்கண்ட ஒருங்கிணைப்பு குழுவின் செயல்பாடுகள் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள நில அபகரிப்பு புகார்களை விரைந்து முடிக்க ஏதுவாக இருப்பதனால், இத்தகைய ஒருங்கிணைப்பு குழுக்களை மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்திடலாம் என தெரிவித்துள்ளார்.

5. இதனை அரசு கவனமுடன் பரிசீலித்து, நில அபகரிப்பு தொடர்பாக பெறப்படும் மனுக்களை விரைந்து முடிக்க ஏதுவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஒருங்கிணைப்பு குழு அமைக்கலாம் என முடிவு செய்தது. அவ்வாறே கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய ஒரு ஒருங்கிணைப்பு குழுவினை ஒவ்வொரு மாவட்டத்திலும் உடனே அமைக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தனித்துணை ஆட்சியர், (வருவாய் நீதிமன்றம்/மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் ஏதாவது ஒரு தகுதிவாய்ந்த அலுவலர்.) | தலைவர் |

| | | |
|---|---|---|
| 2. | துணை காவல் கண்காணிப்பாளர்.<br>(நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு) | உறுப்பினர் செயலர் |
| 3. | உதவி பதிவுத்துறை தலைவர் | உறுப்பினர் |
| 4. | தனி வட்டாட்சியர்,<br>(காடுகள்/நிலவரிதிட்டம்/பிற). | உறுப்பினர் |
| 5. | கோட்ட பராமரிப்பு ஆய்வாளர்,<br>(நில அளவுத்துறை) | உறுப்பினர் |
| 6. | காவல் ஆய்வாளர்,<br>(நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு) | உறுப்பினர் |

6. மேலும், மேற்படி குழுவின் பணிகள் கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது:-

- மேற்கண்ட ஒருங்கிணைப்பு குழுவானது ஒவ்வொரு வாரமும் தனித்துணை ஆட்சியர் / மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் ஏதாவது ஒரு தகுதிவாய்ந்த அலுவலர் தலைமையில் கூட்டப்பட வேண்டும். நில அபகரிப்பு சிறப்பு பிரிவு மூலம் விசாரணைக்கு தயார் நிலையில் உள்ள இனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு வாரமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் இனங்கள் பற்றிய விவரங்களை வருவாய் துறை, பதிவுத்துறை, நில அளவைத்துறை ஆகியவற்றிக்கு, உறுப்பினர் செயலர்/காவல் துறை துணை கண்காணிப்பாளர், நில அபகரிப்பு பிரிவு அவர்களால் முன்னதாகவே தெரிவிக்கப்பட வேண்டும்.
- விசாரணையின் போது தேவைப்படும் ஆவணங்களை முறையே வருவாய்த்துறை, பதிவுத்துறை மற்றும் நில அளவைத்துறை அலுவலர்களால் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக தீர்வு கிடைக்கும் வகையில், ஒவ்வொரு வாரமும் குறைந்தபட்சம் 20 மனுக்களாவது தீர்வு செய்யப்பட வேண்டும்.
- மேற்படி மனுக்கள் மீது விசாரணை மேற்கொள்ளும் போது, குற்ற செயல்களில் ஈடுபட்டது தெரிய வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நபர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்ய வேண்டும். அத்தகைய பரிந்துரைகளின் மீது காவல் துறை உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்திடல் வேண்டும்.
- மேற்படி குழுவானது 15 நாட்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியரிடம், மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

7. மேலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் மூலம் நடத்தப்படும் மாதாந்தர சட்டம் - ஒழுங்கு கூட்டத்தின் போது இப்பொருள் தொடர்பாக விவாதிக்கப்படவேண்டும் என்றும், மேற்கண்ட ஒருங்கிணைப்பு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த முன்னேற்ற அறிக்கையை காலாண்டு இடைவேளையில் அரசுக்கு அனுப்பவும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

// ஆளுநரின் ஆணைப்படி //

வெ. இறையன்பு
அரசு தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
பதிவுத்துறை தலைவர், சென்னை-28.
காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை-4.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்,
சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாநகர காவல் ஆணையாளர்கள்/
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்,
உதவி காவல் துறைத் தலைவர், நில அபகரிப்பு தடுப்பு பிரிவு,
தலைமையகம், சென்னை-4.

**நகல்.**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்